மக்கள் குரல் 23.07.2014

## 100% வேலைவாய்ப்பு பெற முடியும்

# +2 மாணவருக்கு மருத்துவ பட்ட, டிப்ளமோ படிப்புக்கு சங்கர நேத்ராலயா ஆலோசனை

சென்னை, ஜூலை. 23–

+2 தேர்வில் வெற்றி பெற்ற மாணவ–மாணவிகளுக்கு மருத்துவ துறை வேலைவாய்ப்பு சார்ந்த படிப்புகளுக்கான இலவச கல்வி ஆலோசனை முகாம் சங்கரநேத்ராலயா நடத்துகிறது.

சங்கநேத்ராலயா கண் மருத்துவமனையின் ஒரு பிரிவான சங்கரநேத்ராலயா அகாடமி +2 தேர்வில் வெற்றி பெற்ற மாணவ–மாணவியர் மற்றும் அவர்களது பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க 26–ந்தேதி (சனிக்கிழமை) அன்று காலை 9.30 மணியளவில் ''சங்கரநேத்ராலயா அகாடமி, எண்.9, வானகரம், அம்பத்தூர் சாலை, கீழ அயனம்பாக்கம், சென்னை'' என்ற முகவரியில் மருத்துவம் சார்ந்த அறிவியல் படிப்புகளுக்கான கல்வி ஆலோசனை முகாம் ஒன்றினை நடத்துகிறது.

சங்கரநேத்ராலயா அகாடமி வழங்கும் டிப்ளமோ மற்றும் பட்டப்படிப்புகள் மற்றும் டிப்ளமோ படிப்புகள் சென்னை கிண்டியில் உள்ள தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் நடத்தப்படுகிறது.

இதில் வெற்றிகரமாக படிப்பினை முடிக்கும் மாணவர்களுக்கு 100% வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

ஏழை, எளிய மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வசதி உண்டு.

இந்த ஆலோசனை முகாமுக்கு அனுமதி முற்றிலும் இலவசம். ஒவ்வொரு படிப்பிற்கான வல்லுநர்களுடன் நேரடி சந்திப்பு உண்டு. கண்டிப்பாக முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். தொலைபேசி எண்–9840655405 அல்லது *snacademy@snmail.org* என்ற வலைதள முகவரியில் பதிவு செய்து கொள்ளலாம்.